பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 15 வெள்ளிக்கிழமை (28-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 121

# இ.தொ.கா. மீண்டும் ஐ.தே.க.பக்கத்துக்கு?

## தலைமைப் பதவிகளிலும் மாற்றம் கொண்டுவர நெருக்குதல்கள்

கொழும்பு, மார்ச் 28

மலையகத் தமிழ் மக்களின் பிரதான அரசியல் - தொழிற்சங்க சக்தியாக விளங்கும் அமைச்சர் தொண்டமான் தலைமையில் இயங்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் சாயக் கூடும் என்று அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

இதே வேளை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இ.தொ.காவின் முக்கிய கூட்டம் ஒன்றில் அந்த அமைப்பின் தலைமைத்துவப் பதவிகளில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்று நெருக்குதல் கொடுக்கப்படுமென அறியப்படுகிறது.

1994 பொதுத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அக் கட்சியின் சின்னத்திலேயே போட்டியிட்டு ஏழு எம்.பி. பதவிகளைப் பெற்றுக் கொண்டது.

எனினும் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தரப்பில் இருந்து கொண்டு அரசாங்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திடீர் தேர்தல் நடத்தினால் அரசினால் வெல்ல முடியும்

### சிறுபான்மையினர் ஆதரவு தேவை இல்லை எனக்கணிப்பு

கொழும்பு, மார்ச் 28

''உள்ளூராட்சி தேர்தலை நாடாளுமன்ற தேர்தலாகக் கருதி தேர்தல் முடிவுகளை ஆராய்ந்து, திடீர் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு இன்றி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி அமைக்க முடியும்.''

கொழும்பில் இருந்து வெளிவரும் ''மிட்வீக் மிரர்'' என்னும் ஆங்கில வார ஏட்டில் வெளியான அரசியல் கண்ணோட்டத்தில் இவ்வாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாலையை சேர்ந்த பெண் ஒருவர் கொழும்பில் ஆட்கொணர்வு மனு

### தனது மகனை மீட்டுத்தருமாறு கோரி

கொழும்பு, மார்ச் 28

வடபகுதியில் காணாமற் போன தனது மகனை மீட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு கோரி ஏழாலையைச் சேர்ந்த தாயார் ஒருவர் கொழும்பு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வுமனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

ஏழாலையைச் சேர்ந்த செல்வரத்தினம் சரஸ்வதி என்ற தாயார் தாக்கல் செய்துள்ள இந்த ஆட்கொணர்வு மனுவை ஏற்றுக் கொண்ட நீதியரசர் ஹெக்டர்யாப்பா, பிரதிவாதிகள் பதில் மனுத் தாக்கல் செய்ய மே மாதம் 14 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கினார்.

— 17-06-96 இல் எனது மகனா அருந்தவராஜா கோண்டாவில் டிப்போ அருகில் உள்ள இராணுவச் சோதனை நிலையத்தில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிப் பயிலுநர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

### அமைச்சரவை அங்கீகாரம்

கல்வி, உயர்கல்வி அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள சகல பட்டதாரிப் பயிலுநர்களுக்கும் நிரந்தர நியமனங்களை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதே போன்று அரசாங்கத் துறையில் பல்வேறு பிரிவுகளிலும் இணைக்கப்பட்டிருக்கின்ற 1948 பட்டதாரிகளுக்கும் அவரவர் தற்சமயம் வகிக்கின்ற பதவிகளிலேயே நிரந்தர நியமனம் வழங்கவும் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

249 பட்டதாரிகளுக்கு முறைசாரக் கல்வித் திட்ட உதவியாளர்களாக நியமனம் வழங்கப்படும்.

ஏனைய பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமனம் பெறுவர். (இ-3)



இரண்டு தோணியில் கால் வைக்கிற விளையாட்டு இப்படித்தான் முடியும் பாருங்கோ ...!

## இ. தொ. கா மீது பௌசி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 28

''கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் கணேசலிங்கம் தலைமையிலான சுயேச்சைக்குழு தோல்வி அடைந்தமைக்கு இ. தொ. காவே காரணம்.''

இப்படி சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌசி குற்றம் சுமத்தியுள்ளார்.

மாநகர சபைத் தேர்தலில் பிரசாரப் பணியை இ. தொ. கா. இருவாரங்களுக்கு முன்பே நிறுத்திவிட்டது.

அவ்வாறு இ. தொ. கா பிரசாரப் பணியை நிறுத்தாது இருந்திருக்குமேயானால் மேலும் 20 ஆயிரம் வாக்குகளை கணேசலிங்கம் தலைமையிலான குழு பெற்று அதன் மூலம் வெற்றி பெற்றிருக்கலாம்.

தேர்தலின் தோல்விக்கு கணேசலிங்கம் மீது குற்றஞ் சாட்ட முடியாது—

இப்படி மேலும் அவர் தெரிவித்தார். (இ-3-150)

## ஸ்ரீமானிக்கு எதிராக விரைவில் நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 28

அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது போக்குவரத்து அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலி நடந்து கொண்டவிதம் குறித்து ஆராய்ந்து வருவதாக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் பி. வி. குணரத்தின தெரிவித்தார்.

அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்குத் தள்ள அவர் எடுத்த முயற்சிகளை அமைச்சர் குணரத்தின விவரித்தார்.

ஆனால் அந்த முயற்சியில் தான் நினைத்ததை ஸ்ரீமானியால் சாதிக்க முடியாது போனது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தனது கணவரைப் படுகொலை செய்வதற்கு காரணமாக இருந்ததாக நம்பப்படும் கட்சிகளுக்கு ஆதரவாக ஸ்ரீமானி செயற்பட்டமை வருந்தத்தக்கது என்றும் அமைச்சர் குணரத்தின கூறினார்.

ஸ்ரீமானியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு அரசாங்கம் அவ்வாறான ஒரு முடிவை எடுக்கக்கூடும் என்று அமைச்சர் குணரத்தின பதில் அளித்தார். (இ-3)

## படையினருக்கு கசப்பான விமானப் பயணங்கள்

### கொழும்புப் பத்திரிகையில் செய்தி

கொழும்பு, மார்ச் 28

அண்மைக் காலத்தில் விமான மற்றும் ஹெலி விபத்துக்கள் அதிகரித்துள்ளதால் விமானப்படையைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல இராணுவ, கடற்படையைச் சேர்ந்தவர்களும் பாதிக்கப்படும் சம்பவங்கள் இடம்பெறுவதாக 'மிட்வீக்மிரர்' தகவல் வெளியிட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 3 மாதங்களாக கப்பலில் தூங்கிய தபால்கள் பருத்தித்துறை வந்தன

### ஆனால் இன்னும் இறக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 28

மூன்று மாதங்களாகக் கப்பலிலேயே கிடந்த தபால் பொதிகள் தற்போது கப்பல் வடபகுதிக்கு வந்து சேர்ந்து இரு நாள்களுக்கு மேலாகியும் இறக்கப்படவில்லை.

தபால் பொதிகள் இறக்கப்படும் என எதிர்பார்த்து அவற்றை எடுத்து வருவதற்காகச் சென்ற யாழ். பிரதம தபாற்கந்தோர் உத்தியோகத்தர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பொலீஸ் சீருடை விவகாரம்:

## தமிழ் டாக்டர் எவ்வாறு அமெரிக்கா சென்றார்?

### பொலீஸ் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 28

பிரதிப் பொலீஸ் மா அதிபர் மித்ரா ஆரியசிங்கவின் பொலீஸ் சீருடையை அமெரிக்காவுக்கு கடத்த முயன்றார் என்று கூறப்படும் தமிழ் பெண் டாக்டர் தற்பொழுது அமெரிக்கா சென்றுவிட்டார்.

இவர் எவ்வாறு கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் ஜூனில் தேர்தல்

## ஜயரத்தின கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 28

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடத்துவதற்கான பாதுகாப்பு அனுமதியை பொலீஸ்மா அதிபர் ராஜகுரு வழங்கி விட்டார். ஆகவே ஜூன் மாதம் தேர்தலை நடத்த முடிவு செய்யப்பட்டு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

மேற்கண்ட தகவலை பொது மக்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளரும், அமைச்சருமானம் டி. எம். ஜயரத்தின தெரிவித்தார்.

இந்த தேர்தல் தொடர்பாக தமிழ்க் கட்சிகளுக்கு அறிவித்து விட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

''வடக்கு மக்களுக்கு அவர்கள் தெரிவு செய்யும் பிரதிநிதிகள் மூலமான சிவில் நிர்வாகம் அவசரமாக தேவைப்படுகிறது. அதனால் ஜூனில் தேர்தலை நடத்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது'' என்றும் அவர் மேலும் கூறினார்.

(இ-3-150)


நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

(ந. இ. த. பெ. பா.)

**பழைய மாணவர் சங்க**

**பொதுக்கூட்டம்**

**இடம்:-** நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை

**காலம்:-** இன்று (28-3-97) காலை 9.00 மணி

**தலைமை:-** திரு.க. நாகேந்திரம்

அனைத்துப் பழையமாணவர்களையும் அன்போடு அழைக்கின்றோம்.

'ஆரம்பக் கல்வி கற்ற பாடசாலையை மறப்பது பெற்ற தாயையே மறந்ததற்கு ஒப்பானதாகும்'

- செயலாளர்

(46018)



யா/மல்லாகம் மகாவித்தியாலயம்

முறைசாராக் கல்வி தொழிற்திறன் அபிவிருத்திப்பயிற்சி - 1997

முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படும்

1) தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து
2) மொழித்திறன் அபிவிருத்தி

ஆகிய பயிற்சி நெறிகளுக்கு பயிற்சி பெற விரும்புபவர்களிடமிருந்தும் பயிற்றுவிக்க விரும்புபவர்களிடமிருந்தும் (போதனாசிரியர்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்று **04-04-1997** க்கு முன் விண்ணப்பிக்கவும். நேர்முகத் தேர்வு **05-04-1997** காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

- அதிபர்

யா/மல்லாகம் ம. வி.

(46020)



யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய

பாடசாலை அபிவிருத்திச் சங்கப்

பொதுக்கூட்டம்

**இடம்:** பாடசாலை பிரதான மண்டபம்

**திகதி:** 06 - 04 - 1997 (ஞாயிற்றுக்கிழமை)

**நேரம்:** காலை 10-30 மணி (இலங்கை நேரம்)

பெற்றோர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

**வி. மாணிக்கம்** — தலைவர்

**பொ. தர்மேந்திரன்** — உப செயலாளர்

(46012)


## நிர்மாணத்திணைக்களத்தினரின் அஞ்சலி

யாழ்ப்பாண நிர்மாணத்திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

திரு. பொ. பரமேஸ்வரன்

அவர்களின் மாமியார்

**திருமதி மாசிலாமணி இராசம்மா**

24 - 03 - 97 அன்று கொழும்பில் காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். நிர்மாணத்திணைக்கள ஊழியர் நலன்புரிச்சங்கம்.

(46013)

## ஐ. தே. க ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 28

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் விருப்பு வாக்குகள் பெற்றவர்களில் 2 ஆம் இடத்தை வகிக்கும் லியந்த பெரேராவை பிரதி மேயராக நியமிக்க வேண்டும் என்று கோரி ஐ. தே. க ஆதரவாளர்கள் கடந்த புதன் இரவு ஐ. தே. க தலைமையகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அதேவேளை — சிறுபான்மையினத்தவர் ஒருவரை பிரதி மேயராக நியமிப்பது என்ற ஐ. தே. கவின் செயற்குழுவின் முடிவின்படி ஓமார் காமில் பிரதி மேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஐ. தே. க வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த மாதம் 2ஆம் திகதி கொழும்பு மேயராக கரு ஜெயசூரியாவும், பிரதி மேயராக ஓமார் காமிலும் பதவியேற்பார்கள் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-3-150)

## தேர்தல் முடிவை ஆட்சேபித்து ரிட் மனு

கொழும்பு, மார்ச் 28

கண்டி மாநகரசபை, அகலவத்தை பிரதேச சபை ஆகியவற்றின் தேர்தல் முடிவுகளை எதிர்த்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்யவிருக்கிறது.

இந்தத் தேர்தலில் இடம் பெற்ற மோசடிகளை ஆட்சேபித்தே இந்த ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட உள்ளன.

இந்த ரிட் மனுத் தாக்கல் தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சட்ட ஆலோசனை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-3-150)


குருபூசை

நாளை (29-3-97)

தவத்திரு

நாகலிங்க சுவாமிகள்

குருபூசை

ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி அவர்களால் சுவாமிகள் நினைவு மண்டபத்தில் (சங்கானை) பிற்பகல் 1.00 மணி அளவில் ஆராதனையுடன் ஆரம்பித்து மகேஸ்வர பூசையும் நடத்தப்படும்.

ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி

(46005)



விற்பனைக்கு

கோயில் சாமான்கள் உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

**பிள்ளையார்**

07, கைலாச பிள்ளையார் கோயில் பின் வீதி, நல்லூர்.

(46011)



**SHAMROCK**

யா/ ஈச்சமோட்டை வீதி

★ G.A.Q.
கலை முதற்தேர்வு
வெளிவாரி 98
(யா/ பல்கலை.)

★ A/L பகல் வகுப்புகள்
(வர்த்.)

★ O/L பகல் வகுப்புகள்

★ ஆண்டு 9,10 & 11

★ புலமைப்பரிசில்
ஆண்டு 5 / 97

(46009)


# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் சிவக்கொழுந்து (சிவம்)

கற்பொக்கணை, உடுவிலைச் சேர்ந்த சண்முகம் சிவக்கொழுந்து 27-03-97 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகம் - கன்னாத்தை தம்பதிகளின் மகனும், உடுவில் சின்னத்தம்பி - சின்னத்தங்கச்சியின் மருமகனும், சரவணபவன் (சுவிஸ்), மகேந்திரன் (ஜேர்மனி), சிவனொளிபவன் (சுவிஸ்), திஷா (சுவிஸ்), இந்திராணி (கொழும்பு), சறோஜினி (வவுனிக்குளம்), விஜயலட்சுமி (கிரிலப்பனை), வசந்தி (ஆசிரியை, அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, சங்குவேலி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற பத்மநாதன் (இலங்கை இராணுவ பொறியியல் பிரிவு), மருதலிங்கம், கனகசபை (வெள்ளவத்தை நெசவாலை, முன்னாள் லிகிதர்), சோதிலிங்கம், மற்றும் வசந்தி, மகாசித்திரா, மங்களேஸ்வரி (சுவிஸ்), குவனேஸ்வரி (கந்தரோடை) ஆகியோரின் மாமனாரும், கமலநாதன் (கனடா), கிருபாலினி (கனடா), கோபிநாதன், ராகினி (கொழும்பு), சுஜீவா (சுவிஸ்), சுனில் (ஜேர்மனி), சுஜாத்தா, அனித்தா, சுவீனி (வவுனிக்குளம்), பிரியந்தி, நிறைஞ்சன், கிரிஸ்சாந், நிரோ (கொழும்பு), பிரகாசினி, நிவேதா, மதுசன், மதுஷா, தினுஷா, சிவரேகா, மகனியா (சுவிஸ்), நிசாந், சுகன்யா, அலோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் கந்தசாமி நேசமலரின் சகோதரனும் சின்னத்தம்பி உமாபதியின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-03-97) வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு உடுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. மங்கையர்க்கரசி.
(மனைவி)

கற்பொக்கணை,
உடுவில்.

(சி/383)

## திருமதி கந்தையா செல்லம்மா

திருமதி கந்தையா செல்லம்மா 27 - 03 - 97 அன்று அதிகாலை சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ் சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், செல்வரத்தினம் (சவுதி), நவரத்தினம், செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், தவமணி, (பிரதேச செயலர் அலுவலகம் யாழ்ப்பாணம்), யோகேஸ்வரி, சுந்தரலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அன்னம்மா, இராசையா, திலகவதி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற நாகமுத்து மற்றும் சிதம்பரப்பிள்ளை (டென்மார்க்), நடராசா (வவுனியா) ஆகியோரின் மைத்துனியும், துஷீதா (A/L 95), நிருஷீயா (ஆண்டு 9 - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள்) மயூரன் (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி A/L 96), ஷமிலா, பிரணவன், கஜன், சஞ்சீவன், ரிஷிவன், வர்மிலா, அஜிதன், லக்ஸ்மிலா, (உசன், இராமநாதன் மகாவித்தியாலய மாணவர்கள்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27-03-97 ஆந் திகதி உசனில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. நவரத்தினம்
(மகன்)

உசன்,
மிருசுவில்.

(46006)

## சின்னத்தம்பி குணரத்தினம்

(முன்னாள் பிரபல வர்த்தகர், அமுதாஸி நீர்கொழும்பு, தாரணி - நீர்கொழும்பு முன்னாள் அரசாங்க ஒப்பந்தகாரர், குயிக்சி பஸ் உரிமையாளர்)

கட்டுவன் வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குணரத்தினம் 27-03-97 இல் இறைவனடி சேர்ந்துள்ளார்.

இவர் சின்னத்தம்பி பாக்கியம் அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா சிவபாக்கியத்தின் மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், வாகீசன், தாரணி, ரஜீவன் (1996 ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு உரும்பிராய் இந்து), சுஜீவன், சஜீவன் (ஆண்டு-8 யாழ் இ கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற துரைராசா, சிவனேசமணி (கனடா), சற்குணநாதன் (T A. கிளிநொச்சி), தேவராசா, செல்வராசா (பொறியியலாளர், லண்டன்) செகராசா, தியாகராசா, சிவஞானமணி, செல்வராணி, சிவராசா (லண்டன்), றஜனி (பிரான்ஸ்), பிறேமானந்தன் (செல்லக்கிளி கனடா) சாந்தினி, (லண்டன்), அமுதினி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், புவனேஸ்வரி, ராசேந்திரம் (கனடா), இரத்தினபூபதி, மல்லிகாதேவி, கலாசிறி, புஸ்பமலர், யோகலிங்கம், பிறேமானந்தன், தனலட்சுமி, வினாயகமூர்த்தி, குணரத்தினம், சூரியகுமார், சிதம்பரநாதன் சிவராணி, (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29-3-97) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(46021)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூருடன் உறவை மலேசியா துண்டித்தது!

## முன்னாள் பிரதமரின் கூற்றால் நெருக்கடி

கோலாலம்பூர், மார்ச் 28

சிங்கப்பூருடன் தனது உறவுகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருப்பதாக மலேசியா அறிவித்துள்ளது.

மலேசியப் பிரதமர் டாக்டர் மஹத்தீர் மொஹமட் ஜப்பானில் பயணம் செய்துகொண்டிருக்கும் வேளையில் — அவர் இல்லாத நிலையிலேயே — மலேசியாவின் மத்திய அமைச்சரவை கடந்த புதனன்று கோலாலம்பூரில் கூடி இந்த முடிவை எடுத்துள்ளது.

சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ குவான் யு மலேசியாவின் ஜோகூர் மாகாணத்தை துப்பாக்கிச் சூடுகளும், திருட்டும், வன்செயல்களும் நிறைந்த மாகாணம் என்று கீழ்த்தரமாக வர்ணித்ததைக் கண்டித்தே சிங்கப்பூருடனான அனைத்துப் பரிவர்த்தனைகளையும் தற்காலிகமாக நிறுத்திவிட மலேசிய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

தனது தவறான கருத்துக் குறித்து லீ குவான் யு ஏற்கனவே மன்னிப்புக் கோரியுள்ளார். எனினும் மலேசியா எடுத்துள்ள இந்தக் கடுமையான முடிவு குறித்து ஆசியப் பிராந்திய இராஜதந்திரிகள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர். (ஐ-10)

# கூட்டாகத் தற்கொலை செய்த 39இளைஞர்களின் சடலங்கள் மீட்பு!

## சன்டியாகோவில் சம்பவம்

நியூயோர்க், மார்ச் 28

சன்டியாகோவிலில் 39 பேர் கூட்டாகச் சேர்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளனர். சன்டியாகோ நகர அதிகாரிகள் இதனைக் கண்டு பிடித்துள்ளனர்.

18 முதல் 20 வயதுக்குட்பட்ட இவர்களது சடலங்கள் ஒரேமாதிரியான ஆடை அணிந்த நிலையில் காணப்பட்டன.

சொகுசு பங்களா ஒன்றினுள் இருந்து அத்தனை சடலங்களும் மீட்கப்பட்டன.

தற்கொலை செய்து கொண்ட இந்த 39 பேரும் ஏதாவது மதக் குழுவைச் சார்ந்தவர்களா என்பது உடனடியாகத் தெரியவரவில்லை.

மேற்கு நாடுகளில் குறிப்பிட்ட சில மதப் பிரிவுகளைச் சேர்ந்தோர் கூட்டாகத் தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ. நா. மனித உரிமைகள் குழு இஸ்ரேல் மீது கண்டனம் தெரிவிப்பு

## அரபுப் பகுதிகளை விட்டு வெளியேறுமாறு கோரிக்கை

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரபுப் பிரதேசங்களில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி ஐ. நா. மனித உரிமைகள் குழு இஸ்ரேலைக் கண்டித்திருக்கிறது.

ஜெருஸலேம் உட்பட பலஸ்தீனப் பிரதேசங்களில் இருந்து உடனடியாக வெளியேறுமாறு அது இஸ்ரேலிடம் கேட்டுள்ளது.

இது தொடர்பான தனித்தனியான தீர்மானங்களை ஐ. நா மனித உரிமைகள் குழு நிறைவேற்றியுள்ளது. இந்த மனித உரிமைகள் குழுவில் 53 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

இக்குழுவில் அங்கம் வகிக்கும் அமெரிக்கா மட்டும் மேற்படி தீர்மானங்களுக்கு எதிராக வாக்களித்தது. (ஐ)

### யேமன் கரைக்கு அப்பால்

# 60 சோமாலியர்கள் கடலில் மூழ்கி மரணம்!

சனா, மார்ச் 28

யேமன் கரைக்கு அப்பால் நடுக்கடலில் சுமார் 60 சோமாலியர்கள் நீரில் மூழ்கி இறந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது,

சட்டவிரோதமாக யேமன் நாட்டுக்குள் நுழைவதற்காக இரண்டு படகுகளில் ஏற்றிச் செல்லப்பட சுமார் 400 சோமாலிய நாட்டவர்களில் 60 பேர் உயிரிழந்தனர்.

படகுகள் ஏடன் கரையை நெருங்கிக் கொண்டிருந்த வேளை படகுகளை அதிகாரிகள் கைப்பற்றிவிடலாம் என்ற அச்சத்தினால் பயணிகளைக் கடலில் குதிக்குமாறு மாலுமிகள் கட்டாயப்படுத்தினர் என்றும்—

அதனையடுத்து கடலில் குதித்தவர்களில் 35 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் 29பேர் காணாமற் போயுள்ளனர். (ஐ-10)

# நிச்சயமாக மோட்சம் செல்பவர்கள் யார்?

## அமெரிக்காவில் கருத்துக் கணிப்பு

நியூயோர்க், மார்ச் 28

இந்த உலகில் இருந்து நிச்சயமாக மோட்சம் செல்பவர்கள் என நீங்கள் நம்பும் பொது மனிதர்கள் யார்?

இவ்வாறு கேட்டு அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்று அண்மையில் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தியது.

அதில் மோட்சம் செல்லும் முதல் நபராக அன்னை தெரேஸா தெரிவானார். பௌப்றா வின்லே என்ற பிரபல தொலைக்காட்சி நடிகர் இரண்டாவது இடத்தையும் —

இளவரசி டயானா ஐந்தாவது இடத்தையும், அதிபர் கிளின்ரன் எட்டாவது இடத்தையும் பெற்றனர்.

[ஐ-10]

### 'ஸயர்' அரசு முன் வைத்த

# அதிகாரப் பகிர்வுத் திட்டம் கிளர்ச்சியாளர்களால் நிராகரிப்பு!

கின்ஸாசா மார்ச், 28

''ஸயர்'' நாட்டில் ஏறக்குறைய கால்பங்கு பகுதியைத் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கிளர்ச்சியாளர்கள் அதிகாரப் பகிர்வுக்கு அரசு முன்வந்திருப்பதை நிராகரித்துள்ளனர்.

நாட்டின் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் ஒற்றுமைக்காக கிளர்ச்சியாளர்கள் போராடுகிறார்கள் என ஸயரின் நெருக்கடியைத் தீர்ப்பது குறித்த ''லோம்'' ஆபிரிக்க உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ளும் கிளர்ச்சியாளர்களின் பிரதிநிதி கலாநிதி பிஜிமுகரானா தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் தாயரித்துள்ள சமாதானத் திட்டநகலை ஆராயும் இந்த மகாநாட்டில் 17 நாட்டின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளுகின்றார்கள். (ஐ-10)

# பல்கலைக்கழகத்தில் நிகழ்வது 'ராகிங்' அல்ல; 'அறிமுகம்' என்கின்றனர் சிரேஷ்ட மாணவர்

முன்னையகாலங்களிலும், ஏனைய பல்கலைக் கழகங்களிலும் இடம் பெற்றதைப் போன்ற ''ராகிங்'' எமது பல்கலைக்கழகத்தில் இடம் பெறுவதில்லை. ''ராகிங்'' எனும் பெயரால் சில அத்துமீறல்களும் துன்புறுத்தல்களும் இடம்பெறுவதுஉண்டு. இவ்வாறான மன நிலையை பாதிக்கும் சம்பவங்களை சிரேஷ்ட மாணவர்கள் ஆகிய நாம் முழுமனதுடன் எதிர்க்கின்றோம். சில தனிநபர்களால் மேற்கொள்ளப்பட்ட சில தவறான நடத்தைகளை நாம் திருத்தியுள்ளோம். தனிநபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு நிர்வாகத்திற்கு அறிவித்துள்ளோம்.

இன்று எங்களால் விரும்பப்படுவதும் வேண்டப்படுவதும் ''அறிமுகம்'' எனும் நட்புரிமை நிகழ்வே ஆகும். இந்த அறிமுகம் எனும் நட்புரிமையால் சிரேஷ்ட மாணவர்களை மதிக்கும் பண்பு, விட்டுக்கொடுத்தல், நட்புரிமை, கீழ்ப்படிவு, விடய அறிவு, ஒற்றுமை, கூட்டு வாழ்க்கை, பரந்த மனப்பான்மை முதலிய குணங்களும், பண்புகளும் மேலோங்குகின்றன; வெட்கப்படுதல், கூச்சப்படுதல், சபை அச்சம், ஒதுங்குதல், சுயநலம் முதலிய குணங்கள் இல்லாது ஒழிகின்றன; இவற்றையெல்லாம் [illegible] வரும் மாணவன் சிறந்த ஆளுமையுடைய ஒரு பூரண மனிதனாகின்றான். இதனை பல பல்கலைக்கழக புத்திஜீவிகள் ஏற்றுக் கொள்கின்றனர். இதனையே இன்று எமது பல்கலைக்கழகத்தில் [illegible] இவற்றை மாணவர்கள் அத[illegible]ரிக்கின்றனர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வதைப்படுத்தலை மேற்கொள்வதில்லை.

இன்றைய நிலையில் ''அறிமுகம்'' என்பதை ஏற்றுக்கொள்ளும் மாணவர்கள் ஒற்றுமை உணர்வுடன கல்வி, கலாசார, விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றுகின்றனர். இவர்களுடன் இணைய மறுத்த மாணவர்கள் விலகி நிற்பதாக தாமே கூறியுள்ளனர். ''அறிமுகம்'' என்பதை ஏற்க மறுத்து, பாடசாலை மாணவனைப்போல தனித்திருந்து கல்வி கற்க முடியும் என்று கூறி ஒதுங்கியவர்கள் இன்று பல்கலைக்கழக மாணவ சமுதாயத்துடன் சேர்ந்து வாழ முனைகின்றனர். இது ஒரு கேலிக் கூத்தாக இருக்கின்றது.

ஏனைய மாணவர்களில் இருந்து விலகி நிற்கும் இந்த மாணவர்களின் கருத்தினை சில புத்தி ஜீவிகளும் ஏற்றுக் கொள்ளுகின்றனர் அல்லது ஆதரிக்கின்றனர் என எண்ணுகின்ற இம்மாணவர்கள் படுகுழியில் விழுந்து எதிர்காலத்தை இருண்டதாக்குகின்றனர். இவர்களின் கருத்தாக இருப்பது அறிமுகம் தேவையில்லை. பாடசாலை மாணவனைப் போல் தனியார் கல்வி நிறுவன மாணவனைப்போல் பல்கலைக்கழகத்துக்குச் சென்று வருவதாக இருந்தால் போதுமானது என எண்ணுகின்றனர் போலும்.

அறிமுகத்தை மறுக்கும் மாணவருடன் சேர்ந்து வாழ விரும்ப வில்லை. ஒற்றுமையாக கல்வி கற்க விரும்பவில்லை. அவர்களிடம் விட்டுக்கொடுக்கும் மனம்இல்லை. சிரேஷ்ட மாணவர்களுடன் கீழ்ப்படிந்து பழக முடியாதவர்கள், நாம் தனித்துவமாக வாழ்வோம்; உங்கள் உறவு தேவையில்லை என்றவர்கள், இன்று அறிமுகத்தை ஏற்று ஒன்று கூடி நிகழ்த்தும் மாணவர்களின் பொது நிகழ்ச்சிகளில் தாமும் பங்கு பற்றப் போகின்றோம் என எவ்வாறு கேட்பது? இதனை பெரும்பான்மை மாணவர்கள் விரும்பவில்லை. இவர்களின் நிலைப்பாடு மாணவர்கள் நடத்தும் நிகழ்ச்சியைக் குழப்ப முனைவதாக அமையும்.

தனித்துவமாக வாழ்வோம் எனக் கூறிக் கொண்ட இவர்கள் மாணவர் உரிமை பற்றிக் கதைப்பதற்கு அரு

(7 ஆம் பக்கம் பார்க்க)

'யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்கள்' என்ற பெயரில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அது இங்கு அப்படியே பிரசுரமாகுகின்றது.

'ராகிங்' என்ற பெயரால் நடக்கும் அத்துமீறல்களையும் துன்புறுத்தல்களையும் நாம் முழு மனதுடன் எதிர்க்கின்றோம் என்று இந்த அறிக்கையில் சிரேஷ்ட மாணவர்கள் தெரிவித்திருப்பதை எமது சமூகம் மகிழ்வோடு வரவேற்கும் என்பது நிச்சயம்.

அதேசமயம் இந்த உறுதிமொழி வெறும் கறுப்பு - வெள்ளை எழுத்துக்களில் இல்லாமல் முழு அளவில் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதையும் எமது சமூகம் சிரேஷ்ட மாணவர்களிடமிருந்து உரிமையுடன் எதிர்பார்க்கின்றது.

'ராகிங்' அத்துமீறல்களுக்கு எதிராகப் புதிய மாணவர்களும் மற்றும் சமூகமும் கிளர்ந்தெழுவதை, 'அறிமுகம்' என்னும் நட்புரிமை நிகழ்வுக்கு எதிரான கேலிக்கூத்து என வெறுமனே விமர்சித்து ஒதுக்கிவிடலாமா என்பதை வாசகர்களின் முடிவுக்கு விட்டுவிடுகின்றோம். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**கண்டெடுக்கப்பட்டது**

24.3.97 அன்று கச்சேரி நல்லூர் வீதியில்தாலி ஒன்று கண்டு எடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரத்துடன்தொடர்பு கொள்ளவும். மு. சுப்பிரமணியம், 472/1; கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம் (1433)

## கந்தரனுபூதி மனனப் போட்டி

சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணியசுவாமி கோயில் இலட்சார்ச்சனையை ஒட்டி வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் கந்தரனுபூதி மனனப் போட்டி இம்முறையும் நடைபெறவுள்ளது. (ஐ-28)

# தேர்தல்களில் வாக்களிக்க அடையாள அட்டை அவசியம்

## விரைவில் சட்டத் திருத்தம்

கொழும்பு, மார்ச் 28

எதிர் காலத்தில் தேர்தல்களில்வாக்களிப்பதற்கு அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதைக் கட்டாயப்படுத்தும் வகையில் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவிருக்கிறது.

ஒருவர் வாக்களிப்பதற்கு முன் தனது அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் —

ஒருவர் வாக்காளராகத் தம்மைப் பதிவு செய்வதற்கும் அடையாளஅட்டையைசமர்ப்பிக்க வேண்டும் என்றும் — தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை முன்னர் எடுக்கப்பட்டது.

ஆனால் ஒருவர் தம்மை வாக்காளராகப் பதிவு செய்வதற்கு அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும் என வற்புறுத்த முடியாது எனக் கூறி சிலர் எழுப்பிய எதிர்ப்பையடுத்து அந்த விடயம் தற்சமயம் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விரைவில் நாடாளுமன்றத்தில் தேர்தல் சட்டத்தை மாற்றும் திருத்தப்பிரேரணை சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. (ஐ-3-150)

---

மானிப்பாய்

## மருதடி விநாயகர் ஆலய அறிவித்தல்

மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் சம்பந்தமாக **26 - 3 - 97** உதயன் பத்திரிகையில் 6ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் 3ஆம் பந்தியில் உள்ள விடயங்கள் தவறுதலாக இடம்பெற்று விட்டன என்பதையும் அவ்வறிவித்தலில் இரண்டாம் பந்தி வரையிலான விடயங்கள் மீளவும் உறுதி செய்யப்படுவதாகவும் இத்தால் அன்பர்கள் அடியார்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

**மருதடி விநாயகர் ஆலய**
**தர்மகர்த்தா சபை.**

(46004)

---

## வருக! வருக!
## 2,000 ஆம் ஆண்டு இனிதே வருக!!

அகிம்சையின் வெள்ளியாய் நாதா போற்றி!
எழுச்சியின் ஞாயிற்று ஒளியாய் தேவா போற்றி!
மாற்றமாம் வையகத்துள் வேறாய் இறையே போற்றி!
யேசு என்னும் நாமம் கொண்ட நாதா போற்றி!
பாடு சுமந்து பாவம் போக்கும் வேதமே போற்றி!
வல்வினைகள் போக்கும் வைராக்கிய உண்மையே போற்றி!
சிலுவை சுமக்கும் வாழ்விற்கு கலங்கரை விளக்கே போற்றி!
தவக்காலம் பொற்காலம் செபம் ஏற்கும் ஞானமே போற்றி!
புதிய கருத்துக்களாய் கருத்தரித்த இறைவா போற்றி!
மீண்டும் உயிர்கொண்டெழுந்த ஆவியானவரே போற்றி!
அகிம்சையின் அருவியாய் தேன் தமிழ் இனிப்பே போற்றி!
அப்பமாய் தேவைகளின் பகிர்வாய் இறைவனின் சாயலே போற்றி!
வேதமாய் அன்பாய் அன்பின் பிரபஞ்சமே போற்றி! போற்றி!!
போற்றி எம் வாழ்முதலாகிய பொருளே!

**இராம ஜெயபாலன்**
**கொக்குவில்.**

(45774)

---

## சுவாமி விவேகானந்தரின்
**இலங்கை விஜய நூற்றாண்டு வைபவம்**
ஏழைகளின் துயர் துடைக்க உதவுங்கள்
**28-03-1997 ஆம் திகதி**
ஸ்ரீராமகிருஷ்ணரின் நேர்சீடரான

## சுவாமி யோகானந்தரின்
# ஜயந்தி தினம்

இடம்: யாழ். இந்து மகளிர் கல்லூரி
நேரம்; புதியநேரம் முற்பகல் 10.00 மணி
தேவாரம்: யாழ். இந்துமகளிர் கல்லூரி மாணவிகள்
தலைவர்: திருமதி சரஸ்வதி ஜெயராசா
(அதிபர், யாழ். இந்துமகளிர் கல்லூரி)
பிரதம விருந்தினர்:
திரு. வே. ஐயம்பெருமாள் அவர்கள்
(முகாமையாளர், இலங்கை வங்கி இரண்டாம் கிளை)

**தெய்வீக இசைவிருந்து:**
ஞானசிரோன்மணி திரு. நா.வி.மு. நவரத்தினம்
பக்கவாத்தியம் சகிதம்

பக்தர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை.

(சி/375)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 01 - 01 - 1931



அரன் திருவடியில்: 07 - 04 - 1996

## திருமதி அன்னலக்ஷ்மி யோகேஸ்வரன்
( இளைப்பாறிய ஆசிரியை, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை )

**திதி: 28 - 03 - 1997**

அன்புத் தெய்வமே! அணையாத ஜோதியே!
இன்நிழலாய் இருந்தெம்மை சிறப்போடு வளர்த்தவரே!
சென்றது எங்கே? செந்திருவே உந்தன்,
அன்புமுகம் காணாது அகன்றதே ஓராண்டு,
விரத மகிமையும் திருக்கோயில் வழிபாடும்,
அரனடியில் உங்களை அரைநொடியில் சேர்த்ததுவோ!
விலகாத சோகத்தால் வேகுதே எம்நெஞ்சு.
கலங்கரை விளக்காய் கரம்பிடித்த நாள்முதல்,
வழிகாட்டி நின்றவளே! நின்பிரிவால் வாடி, தினம்,
விழிசிந்தும் நீருக்கு விடைசொல்ல என்னுயிரே!
மறுஜென்மம் ஒன்றிருந்தால் மனைவியாய் வந்திடம்மா
நித்தமுனை நினைந்து சித்தம் கலங்குதம்மா.
பித்தாகிப் பிதற்றுகிறோம். பெற்றவளே! அன்னையே!
மறுஜென்மம் எமக்கிருந்தால் நின்மடியில்
மறுபடியும் நாம்மழலை ஆகிட வேண்டுமம்மா!

விமலனடியில் தங்கள் ஆத்மா சாந்தி பெற நாளும்
விழிநீரால் இறைவனை அர்ச்சிக்கின்றோம்.

**யோ. யோகேஸ்வரன் (கணவன்),**
**மக்கள், மருமக்கள், பேரன்,**
**உறவினர், [illegible]**

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(45889)

---

## இரண்டாம் ஆண்டு
# நினைவஞ்சலி

மலர்வு: 23 — 03 — 1931



உதிர்வு: 20 — 03 — 1995

## ஆறுமுகம் சுப்பிரமணியம்
(இளைப்பாறிய விவசாய விரிவாக்க சேவையாளர்)

**திதி: 28 - 03 - 1997**

ஈராண்டு சென்றது அப்பா!
ஈர விழி காயவில்லை உங்கள்
அன்பு முகம் பார்க்காமல்.
ஆசைமொழி கேளாமல்
ஆறிடுமோ எங்கள் மனம்.
ஏங்கி ஏங்கித் தவிக்கின்றோம்
தூங்கி எழுகின்ற போதும்.
துயரோடு விழிக்கின்ற எமது
துன்பத்தை யாரறிவார்?
உள்ளே அழுது வெளியே சிரித்து
ஊமையாய் வாழுகின்ற
உண்மையையும் யாரறிவார்?
மீண்டும் நாம் ஒன்றாகச்
சேருமிடம் எப்போ வரும்?
அதையும் தான் யாரறிவார்?
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

''அமுத சுரபி''
இருபாலை,
கோப்பாய்.

(45987)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் சமாதானத்தை உருவாக்கும் தீர்வுத்திட்டத்துக்கு சகல சக்திகளின் இணக்கத்தையும் பெற அரசு முயலவில்லை

## அரசியலுக்கு அப்பால் பிரச்சினையை தர்ம வழியில் சிந்திக்கும் காலம் வந்துவிட்டது

“பீரங்கிகளால் அல்ல; தர்மத்தினால் மட்டுமே நிரந்தர சமாதானத்தைக் கொண்டு வரமுடியும்.”

“குரோதத்தைக் குரோதத்தால் ஒழிக்க முடியாது காருண்யமே குரோதத்தை வெல்லும்”.

மேற்குறிப்பிட்ட உயரிய வார்த்தைகளை அண்மையில் பத்திரிகையொன்றுக்கு வழங்கியிருந்த பேட்டியொன்றிலேயே வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா கூறியிருந்தார்.

திரு. காமினி பொன்சேகா கடந்த ஆட்சிக்காலத்தில் பிரதி சபாநாயகராகவும் பதவி வகித்தவர். இலங்கையின் மூத்த சிங்களத் திரைப்பட நட்சத்திரங்களில் ஒருவரான காமினி பொன்சேகாவுக்கு அனைத்து மட்டங்களிலும் இரசிகர் கூட்டம் உண்டு.

1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியமைப்பதற்கு திரு. காமினி பொன்சேகா நடித்து வெளிவந்த 'சாகரயக்மெத' என்ற திரைப்படமும் ஒரு பிரசாரமாக இருந்தது.

“சமுத்திரத்தின் நடுவே” என்பதே அத்திரைப்படப் பெயரின் தமிழ் அர்த்தமாகும். கொலையுண்ட பிரபல பத்திரிகையாளரான றிச்சார்ட்டி சொய்ஸாவும் அதில் முக்கிய பாத்திரமேற்று நடித்திருந்தார். அன்றைய சுதந்திரக்கட்சி ஆட்சியின் சீர்கேடுகளை அத்திரைப்படம் வெளிக்காட்டியிருந்தது.

இது தவிர 'கொட்டி வலிகய” (புலியின் வால்), 'நொமியன மினிசு' (அழிவற்ற மனிதர்கள்) என்ற வடக்கு - கிழக்குப் பிரச்சினையை மையமாக வைத்த திரைப்படங்களைக்கூடத் தாமே தயாரித்து அதில் முக்கிய வேடமேற்று காமினி பொன்சேகா நடித்திருந்தார்.

ஐ.தே.க. ஆட்சியில் இருந்தவர்களால் பிரதி சபாநாயகர் பதவி வழங்கிக் கௌரவிக்கப்பட்ட காமினி பொன்சேகா இன்றைய பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்களால் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக்கப்பட்டுள்ளார்.

“தர்மத்தினால் மட்டுமே சமாதானத்தைக் கொண்டு வரலாம்!” என்று திரு. காமினி பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

### அரசியலுக்கு அப்பாற்பட்ட சிந்தனை

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்துவது என பொதுஜன ஐக்கிய முன்னணி கூறிவருகின்றது.

ஆனால் தர்மத்தினால் மட்டுமே சமாதானத்தை ஏற்படுத்த முடியுமென ஆளுநர் காமினி பொன்சேகா கூறியிருப்பது, அரசியலுக்கும் அப்பாற்பட்ட விதத்தில் ஆட்சியாளர்கள் சிந்திக்க வேண்டியிருப்பதையே வலியுறுத்துகின்றது.

தர்மம் என்பது ஒரு பொது மறையாகும்; அனைத்து மானிடர்களையும் நெறிதவறாத நிலையில் இருப்பதற்கு வழிகாட்டுவதே தர்மமாகும்.

புத்தரின் போதனை, பகவத்கீதை, விவிலிய வேதம், அல்- குர்ஆன் என்பவை அனைத்துமே தர்மத்தை இடித்துரைத்து நிற்கின்றன.

'தர்மம் குன்றி அதர்மம் எப்போது தலையெடுக்கிறதோ, அப்போது தர்மத்தை நிலைநாட்ட அவதாரமெடுப்பேன்!' என்று பகவத்கீதையில் கிருஸ்ண பரமாத்மா அர்ச்சுனனிடம் கூறுகின்றார்.

உலகில் இன்று திரும்புமிடமெல்லாம் அதர்மச் செயல்களே தலைவிரித்தாடுவதைக் காண முடிகின்றது.

விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்பன முன்னேறியுள்ளன என்று குறிப்பிடலாம். ஆனால் இந்த முன்னேற்றங்கள் யாவும் மனிதர்களை மனிதர்களாக வாழ வைக்கத் தவறியவையாகவே இருக்கின்றன.

### மேலோங்கும் அதர்மநெறி முறைகள்

நினைத்துப் பார்க்கக்கூட முடியாத குற்றச் செயல்கள், வன்செயல்கள் என்பவற்றில் மானிட சமூகம் ஈடுபட்டுள்ளதையே அவதானிக்க முடிகிறது.

இன்றைய காலகட்டத்தில் தர்மம் என்பது உதாசீனப்படுத்தப்பட்டு அதர்ம நெறிமுறைகளே மேலோங்கி நிற்பதைப் பாக்கர் முடிகின்றது

எனவே இன்றைய பிரச்சினைகளுக்கு 'தர்மம்' என்பதன் அடிப்படையில் அமையும் தீர்வே நிரக்தரமானதாகவும் நேர்த்தியானதாகவும் அமையமுடியும்.

வடக்கு—கிழக்கு ஆளுநர் என்ற வகையில் அப்பிரதேசங்களில் நிலவும் எண்ணிலடங்காத மானிடப் பிரச்சினைகளைக் காணவும் கேட்பதற்குமான வாய்ப்புகளை திரு. காமினி பொன்சேகா கொண்டுள்ளார்.

கடந்த 13 வருட காலமாக இடம்பெற்று வரும் வடக்கு—கிழக்கு யுத்தம் அப்பிரதேசத்தை மோசமான மனிதாபிமானப் பிரச்சினைகளைக் கொண்டதாக மாற்றி விட்டுள்ளது.

அகதிகள், அனாதைகள், அபலைகள் என்று பல்லாயிரக்கணக்கானவர்கள் பரிதவித்து நிற்கும் ஒரு நிலையே வடக்கு-கிழக்கில் காணப்படுகிறது.

'சாண் ஏற முழஞ் சறுக்குவது'போல வடக்கு — கிழக்குப் பிரச்சிரனையைத் தீர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் போதெல்லாம் அம்முயற்சிகள்பாழாகிப் போய்விடுகின்றன. இதனால் எதுவும் அறியாத இலட்சக்கணக்கான வடக்கு—கிழக்குப் பிரதேச வாசிகள் தமது எதிர்காலத்தை நொந்தவர்கள்களாக இருக்கக் காணப்படுகிறனர்.

யுத்தம் என்று கூறி விடுதலைப் புலிகளும், ஆயுதப் படையினரும் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் முழு நாட்டையுமே நாளுக்கு நாள் படுகுழிக்குள் ஆழமாகத் தள்ளி விடுகின்றன.

இருதரப்புமே தமது மேலாதிக்கத்தை நிலைநாட்ட யுத்தத்தைப் புரிகின்றன. ஆனால் எவ்விதத்திலும் ஓர் உறுதியான வெற்றியைப் பெற முடியாதிருக்கின்றது.

இந் நிலையில் “பீரங்கிகளினால் அல்ல; தர்மத்தினால் மட்டுமே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டிவர முடியும்!” என்று ஆளுநர்காமினி பொன்சேகா காலமறிந்து கூறியிருப்பதையே காணமுடிகின்றது.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு சாராருமே தர்மம்-அதர்மம் ஆகியவற்றைப் பிரித்தறிய வேண்டியவர்களாகவுள்ளனர்.

### போர் என்பதே அதர்மம் சார்ந்தது

தமது தரப்பிலேயே நீதி, நியாயம் உண்டென இரு சாராருமே போரில் குதித்து நிற்கின்றனர். ஆனால் போர் என்பதே அதர்மம் சார்ந்ததாக இருக்கும் போது, அதனூடாக தர்மத்தை எவ்விதத்திலும் நிலை நிறுத்த முடியாது!

தர்மத்துக்கான முதற்படி யுத்தத்தை நிறுத்தி அமைதி வழியில் செல்வதேயாகும்.

இலங்கையில் எவருக்குமே பயன்தராத யுத்தத்தினால் நாளுக்கு நாள் பல உயிர்களும், பலகோடிப்பணமும் விரயமாவதைத் தவிர்ப்பதற்கு அனைத்துத்தரப்பிலிருந்தும் உளப்பூர்வமான சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் போராசிரியர் ஜி. எல். பீரிஸ் கடந்த வாரம் கலந்து கொண்ட கருத்தரங்கொன்றில் உரையாற்றியபோது, “சமாதானத்துக்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவே” என்று கூறியிருந்தார்.

தமது அரசு முன்னெடுக்கும் சமாதானத்திட்டத்தை அவர் தீவிரமாகவே பிரசாரஞ்செய்து வரக் காணப்படுகின்றார். ஆனால் அவரால் இத்தீவிர முயற்சியில் எவ்வளவுதூரம் வெற்றி பெறமுடியுமென்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

முன்னர், ஏப்ரலில் தீர்வுத்திட்டம் தயாராகிவிடும் என்று கூறிய நீதியமைச்சர் தற்போது அடுத்த 'பட்ஜெட்டின் முன்னர் தீர்வுத்திட்டம் தயாராகும் எனக் கூறியிருப்பதும் நம்பிக்கையீனங்களையே தோற்றுவித்துள்ளது.

நாளுக்குநாள் யுத்தத்தினால் அதிகரித்துச் செல்லும் செலவுகளையும், அதேசமயம் சமாதானத்துக்கான அவசர தேவையையும் ஒருங்கே நன்குணர்ந்தவராக பேராசிரியர் விளங்குகிறார்.

ஆயினும் அவரால்கூட அரசியல் சூதாட்டத்தின் நிர்ப்பந்தங்களை மீற முடியாமலேயே இருக்கிறது.

இந்நிலையில், தற்போதைய சூழ்நிலையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு முன்னெடுக்கும் சமாதான முயற்சிகள் தென்னிலங்கை எதிர்க்கட்சிகளினதும் தமிழ்க்கட்சிகளினதும் ஆதரவைப்பெற வேண்டியவையாகவுள்ளன.”

இவற்றுக்கு மேலாக விடுதலைப்புலிகளின் ஆதரவு பெரிதும் தேவைப்படுகின்றது.

### இணக்கத்தை ஏற்படுத்தஅரசு முயற்சிக்கவில்லை

பேராசிரியர் பீரிஸின் சமாதானத்தைக் காண்பதற்கான அரசியல் தீர்வுத் திட்டமென்பது முதலில் மேற்குறிப்பிட்ட “சக்திகளின் இணக்கத்தையே பெறவேண்டும்.

ஆயினும் அத்தகைய இணக்கப்பாட்டைப் பெறக்கூடிய அரசியல் சூழலை உருவாக்க அரச தரப்பு முன்வருவதாகத் தோன்றவில்லை.

கருத்தரங்குகளையும், விரிவுரைகளையும் நடத்தி மக்களுக்கு அனைத்தையும் விளக்கலாம். ஆயினும் அதனால் மட்டும் பயன் ஏற்பட்டுவிடாது. எந்தவொரு இனத்தையும் சேர்ந்த சாதாரண மக்கள் அமைதியையே விரும்புபவர்.

பல்வேறுபட்ட அரசியல் சித்தாந்தங்களைக் கொண்ட அரசியல் கட்சிகளிடையே அரசியல் தீர்வுகுறித்து தெளிவான கண்ணோட்டமும் ஒருமைப்பாடும் தேவை.

இந்நிலையில் சகல அரசியல் சக்திகளுமே தமது நிலைப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு “தர்மம்”, நீதி என்ற உயர்வான நிலையிலிருந்து சிந்திக்கத் தலைப்படும் பட்சத்திலேயே 'பீரங்கிகளினால் அல்ல; தர்மத்தினாலேயே சமாதானம் ஏற்படும்!' என்று ஆளுநர் காமினி பொன்சேகா கூறியிருப்பது சாத்தியமாகும். ★

(நன்றி: தினமுரசு)

# திடீர் பொதுத்தேர்தல், அமைச்சரவை மாற்றம் குறித்து அரசாங்க உயர் மட்டத்தில் ஆராய்வு!

## ஸ்ரீமானிக்கு விரைவில் கல்தா?

கொழும்பு, மார்ச் 28

உள்ளூராட்சித் தேர்தலில் ஆளுங் கட்சிக்குக் கிடைத்துள்ள வெற்றியைத் தொடர்ந்து உடனடியாக அமைச்சரவையில் மாற்றம் கொண்டுவருவதா அல்லது திடீர் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதா என்பது குறித்து அரச உயர் மட்டத்தில் தற்போது ஆராயப்பட்டு வருவதாக அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி “த ஐலண்ட்” பத்திரிகையின் வாரமத்தி அரசியல் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் போக்குவரத்து அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலியின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கோட்டையாக விளங்கிய தெகிவளை, கல்கிசை ஆகிய மாநகரசபைகளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கைப்பற்றியுள்ளதைத் தொடர்ந்தும் —

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைக்கு அக்கட்சி தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருவதாலும் —

உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீமானி அத்துலத்முதலி அரசுக்குச் சார்பாக பிரசார மேடைகளில் தோன்ற மறுத்த காரணத்தாலும் —

ஸ்ரீமானியின் கட்சியை அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றுவது குறித்தும் அரச மட்டத்தில் ஆராயப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சித் தேர்தலில் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து திடீர் பொதுத் தேர்தலை நடத்தி அதன் மூலம் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவது குறித்தும் அரசாங்கம் ஆராய்வதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது — இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3-150)

## அரச அதிபர்களுடன் உணவு உற்பத்தி திட்டம் குறித்து ஜனாதிபதி பேச்சு நடத்துவார்

யாழ்ப்பாணம், மார்ச் 28

நாட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள அவசரகால உணவு உற்பத்தி திட்டம் குறித்து நாட்டில் உள்ள சகல அரச அதிபர்களுடனும் எதிர்வரும் 4 ஆம் திகதி ஜனாதிபதி பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இதற்கான அழைப்பு சகல அரச அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அதேவேளை — அரச அதிபர்களுக்கு நிர்வாகப் பணி தொடர்பாக விளக்கும் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 3 ஆம், 5 ஆம் திகதிகளில் கொழும்பு நிர்வாக, அபிவிருத்தி நிறுவனத்தில் நடைபெறவிருக்கிறது, (இ-3)

## எயிட்ஸ் கருத்தரங்கு

வலிகாமம் மேற்கு பிரதேச மக்களுக்கான “எய்ட்ஸ்” நோய் தொடர்பான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நோய் பற்றியும் தடுப்பு முறைகள் தொடர்பாகவும் டொக்டர் எஸ். நச்சினார்க்கினியன் கருத்துரை வழங்குவார்.

(ஐ-12)

## வெளிநாடுபயணம்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா எதிர்வரும் முதலாம் திகதி முதல் வெளிநாட்டு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

தென் கொரியாவில் 5 நாள்களும், சிங்கப்பூரில் 3 நாள்களும், ஆஸ்திரேலியாவில் 10 நாள்களும் தங்கி அங்குள்ள கல்விச் சீர்திருத்த முறைகள் குறித்து அவர் ஆராய்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர் நாடு திரும்பும் வரை மாகாணக் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி பதில் செயலாளராகப் பணியாற்றுவார். (ஐ-3-150)

## யுனிசெவ் சைக்கிள்கள் அன்பளிப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள குடும்ப நல சேவையாளர்களுக்கு (மருத்துவ மாதர்கள்) வழங்குவதற்காக 'யுனிசெவ்' நிறுவனம் 30 துவிச்சக்கர வண்டிகளை யாழ். சுகாதார திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது. இவை இப்போது காங்கேசன் துறை முகத்திற்குகப்பலில் கொண்டு வரப்பட்டுள்ளன.(ஐ-135)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இடைக்கால நிர்வாக சபை குறித்து வர்த்தமானி அறிவித்தல் விரைவில்?

கொழும்பு, மார்ச் 28

வடக்கு – கிழக்கு மாகாண சபைக்கான இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பிரகடனத்லதை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி விரைவில் வெளியிடவிருக்கிறார் என்று கொழும்புப்பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து மாகாணசபை நிர்வாகம் முழுமையாக செயல்பட வாய்ப்பு ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இடைக்கால நிர்வாகசபை அமைக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினரும், ஐ. தே. கவினரும் ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர் என்று ஈ பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்த இடைக்கால நிர்வாகசபை இயங்க ஆரம்பித்த பின்னர் மாகாண சபைக்கான தேர்தலை அல்லது புதிய அரசமைப்பின் கீழ் உருவாக்கப்படும் பிராந்திய சபைகளுக்கான தேர்தலை நடத்தக் கூடிய சுமுகமான நிலை ஏற்படும் என நம்பப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

சட்டம் இயற்றும் அதிகாரம் தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்களை அதாவது நீதி, நிதி, நிர்வாக அதிகாரங்களைக் கொண்டதாக இந்த இடைக்கால நிர்வாக சபை அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த சபைக்கான பிரதம பொறுப்புக்களை பிரதேசத்தில் உள்ள பெரும்பான்மை சமூகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று நாம் கோரியுள்ளோம். நிர்வாகத்தை கொடுப்பது ஜனாதிபதியிடம் தங்கியிருக்கிறது. நிர்வாகத்தை எடுப்பது யார் என்று கூறமுடியாது. தற்துணிவு, அதிகாரம் ஆகியவற்றில் அது தங்கியுள்ளது — என்று டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறியதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

(ஐ-3-150)

## யாழ். அபிவிருத்தி தொடர்பாக மக்களின் கருத்துக்களைப் பெற ஆலோசனைப் பெட்டிகள்

யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைகளை பொது மக்களிடம் இருந்து பெறுவதற்காக ஈ. பி. டி. பி. யாழ். அலுவலகத்தினர் ஆலோசனைப் பெட்டிகளை 6 இடங்களில் வைத்துள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரி, யாழ். பஸ் நிலையம், வேம்படி வீதியில் உள்ள சர்வதேச தொலைத் தொடர்பு நிலையம், யாழ். செயலகம், திருநெல்வேலிச்சந்தை, நல்லூர் கந்தசாமி கோயில் ஆகிய இடங்களில் இந்த ஆலோசனைப் பெட்டிகள் வைக்கப் பட்டுள்ளன.

அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைகள் இப்பெட்டிகளில் சேர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)



## ஏந்திய சிலுவையில் எமக்காக உயிர்நீத்த...

ஏந்திய சிலுவையில் எமக்காக உயிர்நீத்த
சாந்த சொரூபியே! சற்குரு நாயகா!

எம்மீட்பும் வாழ்வும் வலிமையும் மகிழ்வும்
எம் காப்பும் உயர்வும் உம்மினிய சிலுவை!

திக்கற்ற எங்களுக்கு திசைகாட்டி நிற்கும்
ஒப்பற்ற தலைவா! உம்பதம் போற்றி!

தெய்வீக நிலையைத் தெளிவாய் அறிந்து
உய்திடும் வழியில் உம்பணி புரிந்தீர்

மனிதனின் சுபீட்சமும் மாசற்ற கொள்கையும்
புனிதமாய்த் துலங்கப் புதுவழி கூறுவீர்

தோழனும் தொண்டனும் மேய்ப்பனுமாகினீர்
வாழும் முறைகளை எம்முடன் பகிர்ந்தீர்

காற்றிலும் ஊற்றிலும் கடும்புயல் இடியிலும்
ஆற்றலைப் பொழிந்து அற்புதம் படைத்தீர்

சொல்லவும் முடியாச் சுடரொளி வடிவமே!
வல்லமை தாங்கிய விடுதலை வேந்தனே!

ஆவியின் கொடைகளை அவனியில் பொழியும்
கூவிடும் பேய்களைக் கும்பிடச் செய்யும்

பூமியில் எங்கும் பொங்கிப் பொலியும்
புண்ணியப் பூவே! இறைமகன் இயேசுவே!

அன்புநீதி சமாதானம் இன்பவீடு எமக்களிக்க
எம்பாவச் சுமைதாங்கி சிலுவைச்சாவை நீரேற்றீர்

அதிகாரக் கும்பலும் ஆணவக் காரரும்
சதிகாரச் சூழ்ச்சியால் சரிக்கவழி தேடினர்

காட்டிக் கொடுத்தான் கன்னத்தில் முத்தமிட்டு
கட்டி இழுத்தனர் கல்வாரி உச்சிக்கு

அங்கவுடல் நெரிந்து ஆவிநிலை தளர்ந்து
பங்கம்பல சுமந்து பலிக்களம் பயணமானீர்

நிந்தையும் வாதையும் முள்முடி சிலுவையும்
தந்தையே! எம்பாவப் பரிகாரமாக்கினீர்

இலட்சிய வாஞ்சையும் இன்னுயிர்த் தியாகமும்
உயர்ச்சியில் விளங்கவே, உயர்ந்தது சிலுவை

எல்லாம் முடிந்ததென்று உம்தந்தை கரங்களிலே
நல்லுயிரை ஒப்படைத்து உம்பலி கொடுத்தீர்

உம்மரிய மரணம் மகிமையில் வாசல்
எம்மினிய பயணம் இதிலோடும் ஆவல்

உம்கல்லறை அடக்கம் புதுவாழ்வின் தொடக்கம்
உம்நெஞ்சறை எங்கள் புலன்களின் ஒடுக்கம்

சத்தியநாதன்! சாவினை வென்றார்! அல்லேலூயா
நித்தியஇன்பம் நிலைத்திட வைத்தார்! அல்லேலூயா

ஞா. அரியமலர்
மிருசுவில்.

(45981)

### விளையாட்டுப் போட்டிகள்

கொழும்புத்துறை, மார்ச் 28

கோண்டாவில் ரோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் அதிபர் க. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளன. (ஐ-30)

★ ★ ★

நல்லூர் ஞானோதய வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் த. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். இந்துக்கல்லூரியின்முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் கலந்து கொள்வார்.

## உப்புக்கூட்டுத்தாபன ஊழியருக்கு 2வருட சம்பள நிலுவை, நஷ்டஈடு

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்த 245 பேருக்கும் 2 வருடச் சம்பள நிலுவையும், நஷ்டஈடும் வழங்கப்பட உள்ளன.

இவற்றை வழங்கி அவர்களை ஓய்வு பெறச் செய்ய கொழும்பில் நடந்த மாநாடு ஒன்றில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாயன்று கைத்தொழில் அமைச்சுச் செயலாளர் ஒஸ்டின் பெரேரா தலைமையில் நடந்த இந்தமாநாட்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்ட அரச அதிபர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த 94ஆம் ஆண்டு முதல் ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு சம்பளம் வழங்காதமை குறித்து இம்மாநாட்டில்ஆராயப்பட்டது.

94 ஆம் ஆண்டு முதல் 31- 12- 96 வரையானகாலப் பகுதிக்கு அவர்களுக்கு சம்பளம் வழங்குவது என்றும் —

ஒருதொகை நஷ்டஈட்டுத் தொகையை வழங்குவது என்றும்—மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. (இ-3)

## ராணுவத்துக்கும் கடற்படைக்கும் ஆட்சேர்ப்பு விரைவில் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 28

இலங்கை இராணுவப் பிரிவுக்கு ஆட்திரட்டும் வகையில் எட்டாம் வகுப்பு சித்தியடைந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் 1ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை இவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் பனாகொடை போதிராஜராமய விகாரையில் நடைபெறவுள்ளது.

இதேவேளை — இலங்கைக் கடற்படைக்கு ஆட்திரட்டும் பணியும் ஆரம்பமாகியுள்ளது. இதன்பொருட்டு கொழும்பு, கண்டி, காலி, தங்காலை, கல்பிட்டி, வெலிசர, அனுராதபுரம் தியத்தலாவ, திருமலை ஆகிய இடங்களில் ஆட்களைச் சேர்க்கும் நிலையங்கள் அமைக்கப்பட இருப்பதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

### சமய சந்நிதிகளில்

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் நடைபெறுகிறது. ஆயிரத்து எட்டு சங்காபிஷேகத்தை தொடர்ந்து சுவாமி வீதியுலா இடம்பெறும். நண்பகலில் ஸ்ரீ முருகன் அன்னதான சபையினரால் அன்னதானம் வழங்கப்படும். (ஐ-28)

★ ★ ★

நாயன்மார்கட்டு ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் (அரசகேசரிப் பிள்ளையார்) ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

★ ★ ★

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய மண்டலபூர்த்தி நவோத்ர ஆயுத பத்தாயிரத்து ஒன்பது சங்காபிஷேக நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை காலை யாகபூசை, விசேட திரவிய மகாபிஷேகம், திரிகண்டஸ்பர் சாகுதி மகாபூர்ணாகுதி என்பன இடம்பெறவுள்ளன.

### குருபூசை வழிபாடு

கொழும்புத்துறை, மார்ச் 28

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் அண்மையில் யோகர் சுவாமிகளின் குருபூசை நிகழ்வு மிகசிறப்பாக நடைபெற்றது. இந்து மாணவர் மன்றப் பொறுப்பாசிரியர் திருமதி ச.லோககுகதாசன் தலைமையில் இடம்பெற்ற குருபூசை வழிபாட்டில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் சொற்பொழிவாற்றினார். (ஐ-30)

## மக்களுக்காகவே சிந்திய இரத்தம்

எத்தனையோ மக்கள் தம் உயிரை மக்களுக்காகத் தியாகம் செய்துள்ளனர். ஆயின் எவரது இரத்தமாவது பாவக் கறையை கழுவியதாக வரலாறு இல்லை. இரட்சகர் இயேசுவின் இரத்தமோ பாவ மன்னிப்புக்கென்று பலருக்காகச் சிந்தப்பட்ட இரத்தம் (மத் 26 : 29). நம்மை நீதிமான்களாக்கிய இரத்தம் (உரோ 5 : 9). விலைமதிக்கப் படாத இரத்தம் (இரா 1:19). கல்வாரியின் பெரிய வெள்ளியன்று சிந்திய இரத்தம்.

எனவே இந்த வெள்ளியே, வெள்ளிக்கிழமைகளில் தலைசிறந்தது. மிகப்பெரியது. மிக நல்லது. அன்றுதான் ஆதாம் — ஏவாளின் பாவத்தால் தாறுமாறாக எழுதப்பட்ட நம் தலை எழுத்தை, இயேசு அழித்து அதை நேராக எழுதி, இறைவனுடன் நம்மை இணைத்தார். இயேசுவின் திருப்பாடுகளை இன்று நாம் வாசித்து தியானிக்கும் போது நமது கருத்தைக் கவர்வது அநியாயக் குற்றச்சாட்டு, அநியாயத் தீர்ப்பு, அநியாயக் கொலை.

### அநியாயக் குற்றச்சாட்டு

தேவதுரோகி, இராசதுரோகி, கலகக்காரன், குழப்பக்காரன் என்பவை இயேசு மேல் சுமத்தப்பட்ட குற்றங்கள். இவர் பிறந்தவுடன் [illegible] (லூக் 2: 14). சமாதானம் செய்வோர் பேறுபெற்றவர் என்றுதானே இந்த சாந்தமூர்த்தி கூறினார். அடித்தவனை அன்பு செய் என்று கூறிய இயேசுவா கலகக்காரன்? மீனிலிருந்து பணமெடுத்து வரி செலுத்தியவரா இராசத்துரோகி?

### அநியாயத் தீர்ப்பு

ஏரோது அரசன் இயேசுவை பைத்தியம் என்றான். சுமத்தப்பட்ட குற்றங்கள் நிரூபிக்கப்பட வில்லை என்று நன்கறிந்தும் சாட்டையால் அடிக்கக் கட்டளையிட்டான் பிலாத்து. நிரபராதியான இயேசுவைக் கொலை செய்யுமாறு கூக்குரலிட்டது சனத்திரள். "அவரிடம் ஒரு குற்றமும் காணவில்லை" என்று கூறிக்கொண்டே மரணத் தீர்ப்பிட்டான் ஆளுநன் பிலாத்து. அனைத்துலகிலும் நீதி மன்றங்கள் அளித்த தீர்ப்புகளில் அநியாயமான தீர்ப்பு இது.

**இன்று பெரியவெள்ளி**

### அநியாயக் கொலை

இரும்பாணிகள் இயேசுவின் இரத்தத்தைக் குடிக்க, கசையடிபட்ட உடல் வேதனையால் துடிக்க, சிலுவை சுமந்த தோள் காயம் வாட்டி வதைக்க, முள்முடி அழுத்தியதால் ஏற்பட்ட முகக் காயங்கள் குருதியைப் பெருக்க நம் பாவாக்கிரமங்களுக்காக உடலைப் பிழிந்து உதிரம் வடிய விட்டு கொடுஞ்சிலுவையதில் உயிர் விட்டார் இயேசு பெருமான்.

### இயேசு துன்புற்றது நமக்காக

அன்று நமக்காகத் துன்புற்ற இந்த ஊழியன் இன்றும் பரம தந்தையிடம் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். அவரது விலைமதிப்பற்ற திரு இரத்தம் நமக்காக இறைவனிடம் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

"தம் வழியாக கடவுளை அணுகிச் செல்வோரை முற்றும் மீட்க வல்லவராயிருக்கின்றார். அவர்களுக்காகப் பரிந்துரைப்பதற்கென என்றுமே வாழ்கிறார் (எபி 7:25) (1 அரு 2:1).

ஆம் இயேசு நம் அனைவருக்காகவும் இறந்தார். எனவே அவரால் மீட்கப்பட்ட நாம் அனைவரும் சகோதரர்கள் என்ற உணர்வு நம்மிடம் வளரவேண்டும். இயேசுவைப் போன்று எமது கடமைகளை மட்டுமன்றி எம்மையே பிறர் நலனுக்காக அர்ப்பணிக்கத் தயங்கக் கூடாது.

இயேசு எமக்காகத் தம்மையே கையளித்தார் (கலா 2:20). நாம் இயேசுவுக்காக என்ன செய்தோம்? என்ன செய்கின்றோம்? என்ன செய்யப்போகிறோம்? என்ற வினாக்கள் பலனுள்ள பதில்களாக மாற இப்பெரிய வெள்ளி எமக்கு வழிகாட்டட்டும் ★

— சாமுவேல் பெனடிக்ற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இப்படியும் ஏமாற்றலாமா?

அரசாங்கம் வழங்கிய மீளக் குடியமர்வுக் கொடுப்பனவான 5,000 ரூபாவைப் பெற்றுக் கொண்டவர்களின் உணவு முத்திரைகள் மூன்று மாத காலத்தில் நிறுத்தப்படக் கூடும் என்ற அதிர்ச்சித் தகவலை யாழ். அரசாங்க அதிபர் வெளியிட்டிருக்கிறார்.

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு பெற்றவர்கள் சுய தொழில்களைச் செய்கிறார்களா என்பது குறித்து விவரம் சேகரிக்கப்பட்டு, அதன் பின்னர் உணவு முத்திரையை நிறுத்துவதா இல்லையா என்பது குறித்து முடிவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுக்கும் சுய தொழிலுக்கும் அதனூடாக உணவு முத்திரைகளுக்கும் உள்ள தொடர்பு என்னவென்று விளக்கப்படவில்லை. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் முயற்சியாகவே இது தெரிகிறது.

இடம்பெயர்ந்து சென்று பின்னர் மீளக்குடியமர்வோர் தாங்கள் முன்னர் வாழ்ந்த வீடுகளில், வீடுகள் அழிந்திருந்தால் அல்லது சேதமடைந்திருந்தால் புதிதாக குடியிருப்பு (கொட்டில்) ஒன்றை அமைத்து வாழ்வதற்குப் பணம் தேவையில்லையா?

வீடுகளைச் சுற்றி வேலியிடவும், கிணறு இறைத்துத் துப்புரவு செய்யவும், காடு மண்டிக் கிடந்த வீட்டு வளவைத் துப்புரவு செய்யவும், உடைந்து போன ஓடுகளை மாற்றவும் என்று மட்டும் பலரும் ஐயாயிரம் ரூபாவுக்கும் அதிகமாகவே செலவிட்டிருக்கிறார்கள்.

இதில் உணவு முத்திரை பெறுவோர், உணவு முத்திரை பெறாதோர், 'அ' கார்ட், 'இ' கார்ட் 'உ கார்ட்' வைத்திருப்போர் என்ற வேறுபாடு இன்றி எல்லோருமே பணம் செலவிட்டிருப்பர்.

அந்தச் செலவுகளை ஈடு செய்யும் பொருட்டு அரசு தன்னால் இயன்ற சிறு தொகையான 5,000 ரூபாவை வழங்கப்போகிறது என்றுதான் எல்லோரும் எண்ணியிருந்தார்கள்.

இடம் பெயர்வினால் தொழில் இழந்தோர் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளோர் என்ற வகைசேர்ந்தோர் சுயதொழில் தொடங்க நிதி உதவி வழங்குவது சுய தொழில் திட்டத்தின் கீழான உதவியாகுமே அன்றி மீளக் குடியமர்வு கொடுப்பனவு என்ற வகைப்படமாட்டாது.

ஆனால் அரசாங்கம் மீளக் குடியமர்வை சுய தொழில் திட்டம் என்றும் சுய தொழில் திட்டத்தை மீளக் குடியமர்வு என்றும் சேர்த்து 'சாம்பார்' உதவித் திட்டமாக்கியிருக்கின்றதா?

இப்படி ஒரு 'சாம்பாரை' தாம் தயாரித்திருப்பதாக அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் முன்னரே தெரிவித்திருக்கலாம். மீளக் குடியமர்ந்த எல்லோருக்கும் 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என்று மொட்டையாக அறிவிக்கப்பட்டது.

இப்போது திடீரென ஒரு வியாக்கியானம் கொடுத்து, மக்களை ஏமாற்ற நினைப்பது, பாதிப்புற வைப்பது எந்த வகையிலும் நியாயமாகாது. தமிழரை எப்படியும் ஏமாற்றலாம் என்ற அடிப்படையின் ஒரு புதிய வெளிப்பாடா இந்த அதிர்ச்சித் தகவல்?

# தென் ஆபிரிக்க அரசியல் சீர்திருத்தம் குறித்து பீரிஸ் நேரில் ஆராய்வார்

### அவர் தலைமையிலான குழு அடுத்த வாரம் பயணம்

கொழும்பு, மார்ச் 28

தென்ஆபிரிக்காவில் மேற்கொள்ளப்பட்டுள்ள அரசமைப்பு சீர்திருத்தம் குறித்து நேரில் ஆராய நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தலைமையிலான குழு ஒன்று அடுத்த வாரம் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கிறது.

அமெரிக்க உதவித் திட்டத்தின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த விஜயத்தில் செல்லும் குழுவில் சட்ட மா அதிபர் சரத்சில்வா, சட்ட வரைஞர் நளின் அபயசேகரா ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

இக்குழுவினர் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுடன் பேச்சு நடத்துவார்கள்.

(இ- 3-150)

# எதிர்காலத்தில் தேர்தலின் போது சிவில் யுத்தம் ஏற்படும் நிலை

### ஐ. தே. கட்சி எம்.பி எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 28

''எதிர்காலத்தில் நடக்கும் தேர்தல்களின் போது சிவில் யுத்தம் ஏற்படும் அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது''

இப்படி கண்டி மாவட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம கண்டியில் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலின் போது இடம்பெற்ற வன்செயல்கள், குழப்பங்கள் தொடர்பாக ஐ. தே. க. விவரங்களைத் திரட்டி வருகின்றது.

அவற்றுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்காக சட்ட ஆலோசனை நடத்தி வருகிறோம் — என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3-150)

# சில அமைச்சர்களின் கை ஓங்க காரணமான தேர்தல் முடிவுகள்

உள்ளூராட்சித் தேர்தலில் 7 மாவட்டங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 100 சதவீத வெற்றியைப் பெற்றுள்ளதைத் தொடர்ந்து அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் ஜனாதிபதியின் ''உள்வீட்டுப் பிள்ளை'' நிலைக்கு மாறிவிட்டார்கள்.

இப்படி கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு அவர்கள் ஈட்டிக் கொடுத்த வெற்றியை அடுத்து அவர்கள் ஜனாதிபதியுடன் மிக நெருக்கமானவர்களாகவும் உள்வீட்டுப் பிள்ளைகளாகவும் மாறியுள்ளனர். அமைச்சரவையில் அவர்களின் கைஓங்கிவிட்டது— என்றும் அப்பத்திரிகை தெரிவித்தது.

(இ-3-150)

★ கொழும்பு. மாநகரசபையில் தோல்வி:

# வேட்பாளர் கணேசலிங்கத்தின் மீது சிரேஷ்ட அமைச்சர் குற்றச்சாட்டு!

கொழும்பு, மார்ச் 28

''ஐ. தே. க. ஆதரவாளரான மேயர் ஒருவரை கொழும்பு மாநகரசபையின் தேர்தலில் நிறுத்தியமையே பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தோல்வியடையக் காரணம்'' என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் பொ. ஐ. மு. தோல்வியடைந்தமைக்கான காரணம் குறித்து ஆராய கடந்த திங்கட்கிழமை கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அச்சமயம் அங்கு பேசுகையிலேயே சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இப்படி பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள் சுயேச்சைக் குழுவில் ''கடிகாரம்'' சின்னத்தில் போட்டியிட்டமையும் —

தேர்தல் பிரசாரங்களில் சுயேச்சைக்குழுவின் தலைமை வேட்பாளரான கே. கணேசலிங்கம் தாம் மேயரானால் நகரைச் சுத்தமாக வைக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறியமையும்— தோல்விக்குக் காரணம் எனக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

முன்பு இவர் மேயராக இருந்தபோது நகரைச் சுத்தமாக வைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையே அவரின் பிரசாரம் எடுத்துக் காட்டியுள்ளது என்றும் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

கண்டி மாநகர சபைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்கு, தேர்தல் பிரசாரத்தின் கடைசிக் கட்டத்தில் சக்திவாய்ந்த அமைச்சர் ஒருவரின் மகனும், அமைச்சரின் செயலாளரும் தவறாக நடந்தமையே காரணம் எனவும் அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-150)

## அபிப்பிராயம் தெரிவிக்க பதிவேடு

நவாலி, மார்ச் 28

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கக்கிளைகள் மூலம் வழங்கப்படும் நிவாரணப் பொருள்கள் சம்பந்தமாக பாவனையாளர்கள் தமது அபிப்பிராயங்களையும் முறைப்பாடுகளையும் தெரிவிக்க முடியும்.

இதற்காக பாவனையாளர் முறையீடுகளும் அபிப்பிராயங்களும் என்னும் பதிவேடு ஒவ்வொரு கிளையிலும் வைக்கப்பட்டுள்ளது.

(இ- 100)

## விசர்நாய் கடித்தவர் மரணம்

கடந்த சில நாள்களுக்கு முன் விசர் நாயினால் கடியுண்டு தகுந்த சிகிச்சையை மேற்கொள்ளத் தவறிய ஒருவர் விசர் நாய்கடி நோய்க்கிலக்காகி மரணமானார்.

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த ஐயாத்துரை கணேசலிங்கம் (வயது 36) என்பவரே மரணமானவராவார். (இ-15)

## கலந்துரையாடல்

கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வு உதவியாளர்கள் மற்றும் சிறுமுதனிலைச் சங்கங்களின் கணக்காய்வாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவுத் திணைக்கள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-30)

# கைவிடப்பட்ட காவலரணுக்குள் சென்றவர் மிதிவெடியில் சிக்கினார்

### இரு கால்களையும் இழந்தார் சிறுமி!

யாழ்ப்பாணம், மார்ச் 28

இராணுவத்தினரால் கைவிடப்பட்ட காவலரண் பகுதிக்குள் பொருள்கள் எடுக்கச் சென்றவர்களில் ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு இருகால்களும் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டார்.

சுன்னாகம் பகுதியில் நேற்று இடம் பெற்ற இச் சம்பவத்தில், சுன்னாகம் கல்லாக்கட்டுவனைச் சேர்ந்த புவனேஸ்வரன் பூவதனி (வயது 14) என்ற சிறுமியே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-15)

## நாளை

**பங்குனி 16**

சனிக்கிழமை

திதி: பஞ்சமி

பிற்பகல் 12.58 வரை.

நட்சத்திரம்: அனுஷம்

பிற்பகல் 04.06 வரை

சுபநேரம்: 03.13-04.43

ராகுகாலம்: 09.13-10.43

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## வீடமைப்பு கடன்

நவாலி, மார்ச் 28

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் ரூபா 25 ஆயிரம் வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 6 பேருக்கு முதலாவது கடன் பணம் வழங்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் 2 ஆயிரத்து 500 ரூபா முதல் 6 ஆயிரம் ரூபா வரை வருமானமுள்ளவர்கள் இக்கடனுக்கு விண்ணப்பிக்க முடியும்.

(இ-100)

## சீநோர் கட்டட பகுதியில் மலசல கூடம்

யாழ். கடலேரிப் பகுதியூடாக வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் வரும் மக்கள் தற்காலிகமாக தங்கும் சீநோர் கட்டடப்பகுதியில் தற்போது பாவனையிலுள்ள மலசல கூடம் போதாததால் மேலும் இரண்டு மலசல கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

யாழ். மாநகரசபையினர் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

(இ-15)

## பல்கலைக்கழகம்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

கதை அற்றவராகக் காணப்படுகின்றனர். பல்கலைக்கழகம் என்பது பல கலைகளை, அறிவுசார் விடயங்களை அறிந்து கொள்ளும் ஒரு சர்வ கலாசாலை. பல்வேறு பிரதேச மாணவர்களும் ஓர் இடத்தில் சந்திக்கும் போது பல்வேறு விடயங்களையும் அறிந்துகொள்ள முடியும். இவ்வாறு தான் ஒரு மாணவன் முழு மனிதனாகின்றான். இவற்றை உணர்ந்த காரணத்தினால் தானோ இன்று மாணவர்களுடன் உறவாட விரும்புகின்றனர். இது அவர்கள் விட்ட தவறை உணர்ந்து கொண்டு மன்னிப்புக்கேட்பதாகவே அமையும்.

இவர்கள் ஆரம்பகாலத்தில் சிரேஷ்ட மாணவருக்கு கீழ்ப்படிய மறுத்து அவர்களுடன் இணைந்து வாழ விரும்பாதவர்கள். அதே கல்வியாண்டு மாணவர்களுடன் இணைந்து நிற்க மறுத்தவர்களுக்கு அவ்வப்போது பல புத்திமதிகளைக் கூறியபோதும் ''நாம் தனித்து படிக்க மட்டுமே வந்தோம்'' ''ஏனையவர்களின் உறவு எமக்குத் தேவையில்லை'' எனும் நிலைப்பாட்டில் இருந்தவர்கள் இன்று ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து உறவாட விரும்புவது என்பது தாம் அறிமுக நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்களுடன் ஒத்துப் போகாதிருந்தது தவறு என்பதை தற்போது அறிந்து மனந்திருந்தி வருவதுபோலத் தெரிகிறது. இவ்வாறான உறவாடலுக்கு இவர்கள் விரும்பினால் சிரேஷ்ட மாணவர்களிடம் பொது மன்னிப்புக் கேட்டால் மன்னிப்பளிக்க மாணவர்கள் தயாராகவுள்ளனர்.

அறிமுகம் என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் இன்று ஏனைய மாணவர்களைப் பழிச்சொல்லுக்கு ஆளாக்குகின்றனர். தாம் ''ராகிங்'' என்பதை எதிர்க்கும் சீர்திருத்தவாதிகள் என்று கூறிக்கொண்டு ஏனையவர்களை ''ராகிங்'' செய்பவர்கள் மிருகத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் என சித்திரிக்கின்றனர். இவ்வாறான பிரசார நடவடிக்கைகளை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். பல்கலைக்கழகத்தில் ஒரு பிரச்சாரமும், பல்கலைக்கழகத்திற்கு வெளியே மாணவர்களை இழிவுபடுத்தும் பிரசாரமும் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் மாணவர்களை விசனப்பட வைக்கின்றன.

சிரேஷ்ட மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜீவ் கொலைச் சந்தேக நபர்கள்

# சிவராசன் தனுவுடன் நின்று ஜெயலலிதா புகைப்படம்?

## தமிழக சட்டசபையில் கேள்வி

சென்னை, மார்ச் 28

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஒற்றைக்கண் சிவராசன், தனு ஆகிய இருவரும் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுடன் நின்று புகைப்படம் எடுத்திருந்தனரா?

இதுசம்பந்தமாகபத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்திகள் குறித்து மாநில அரசு விசாரித்து மத்திய அரசுக்கு தெரிவிக்கும் என்று முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று தமிழக சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக சட்டப் பேரவையில் பல உறுப்பினர்கள் கொண்டுவந்த சிறப்பு கவன ஈர்ப்புத்தீர்மானத்துக்குப் பதில் அளிக்கையில் முதலமைச்சர் இவ்வாறு கூறினார்.

சட்ட மன்ற அ. தி. மு. க. தலைவர் திருநாவுக்கரசு இந்தத்தீர்மானத்தின் மீது பேசுகையில், படத்தில் சிவராஜா, தனு என்று குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் கோகூரைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் என்றும்—

இவர்கள் தற்போது உயிருடன் இருக்கிறார்கள் என்றும்—கூறினார்.

இது குறித்து அரசு ஆராய்ந்து உண்மையை அறிய வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கோகூரைச் சேர்ந்த சட்டமன்ற ஜனதாதள் உறுப்பினர் வெங்கடசாமி பேசுகையில், தனு என்று குறிப்பிடப்பட்டுள்ளவரின் பெயர் தாட்சாயினி என்றும், சிவராசன் என்று குறிப்பிடப்பட்டுள்ளவரின் பெயர் விஜயகுமார் என்றும், இவர்களை தனக்கு நன்றாகத் தெரியும் என்றும் கூறினார்.

இதற்கிடையில் ராஜீவ் கொலையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சிவராஜன், தனு ஆகிய இருவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டதாக சில பத்திரிகைகளில் புகைப்படம் வெளிவந்துள்ளதாகவும்—

இது உண்மைக்கு மாறானது என்றும் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று விடுத்தஅறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்தப் புகைப்படம்குறித்து சி. பி. ஐ. விசாரணைக்கு தாம் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (3)

## படையினருக்கு..

(முதலாம் பக்கத் தொடர்)

பலாலி விமான நிலையத்தில் இருந்து விடுமுறையில் சென்ற இராணுவ அதிகாரி ஒருவர் இரத்மலானை விமான நிலையத்தில் இறங்கி மொறட்டுவவில் உள்ள தனது வீட்டுக்குச் செல்வதற்காக ஓட்டோ ஒன்றில் பயணம் செய்தார்.

அந்த அதிகாரி அந்த ஓட்டோ சாரதியிடம் உரையாடினார்.

"தம்பி! வடபகுதியில் யுத்தம் முடிந்து விட்டது. நாங்கள் பங்கர்களுக்குள் இருக்கிறோம். எந்த நேரத்திலும் எதிரியைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். நாங்கள் பயப்படவில்லை.

"ஆனால் விமானத்தில் வரும் ஒரு மணிநேரம் தான் பயமாக இருக்கிறது. என்ன நடக்குமோ என்று தெரியாத நிலை நிலவுகிறது, கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டுதான் அந்த ஒரு மணித்தியாலத்தைக் கழிக்கிறோம். விமானத்தில் வரும் போது நான் இறக்க விரும்பவில்லை".

இப்படி அவர் கூறினார்.

மற்றொரு பிரிகேடியர் ஒருவர் தமது நிலை குறித்துக் கூறுகையில் விமானத்தில் முன் ஆசனத்தில் பயணம் செய்யும் தாம் விமானம் புறப்பட்டு இறங்கும் வரை 40 தரம் கண்ணை மூடித் திறப்பதாகக் கூறினார்.

(இ-3-150)

## வைப்புச் சான்றிதழ்

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஷப்றா யுனிக்கோபினான்ஸ் நிறுவனத்தினர் வழங்கும் மூன்றாம் கட்டக் கொடுப்பனவை யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக் கொள்வதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு செல்லாமலே பணத்தைப்பெறும்பொருட்டு பதிவு செய்தவர்களின் வைப்புச் சான்றிதழ்கள் இப்போது கொழும்பு அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் — காங்கேசன் துறை வீதியில் உள்ள தற்காலிக அலுவலகத்தில் வைப்புச் சான்றிதழ்களை இதுவரை ஒப்படைக்காதோர் இம்மாதம் 31 ஆம் திகதி வரை கையளிக்கலாம் என்று முகாமைத்துவப் பிரதிநிதி தெரிவித்தார். (அ)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு அழைப்பு

யாழ். கல்வி வலயம் ஒன்றுக்கு உட்பட்ட பாடசாலைகளில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களைத் தமது ஆவணங்களுடன் இம் மாதம் 31 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வலயம் ஒன்று. அலுவலகத்துக்கு வருமாறு வலயம் ஒன்று கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் வகையில் இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்று அறிய வந்தது.

## ஏழாலையை...

(முதலாம் பக்கத் தொடர்)

வைத்து பத்மநாதன் ரமேஷ் என்பவருடன் கைதானார். எனது மகனின் இருப்பிடம் இன்னும் தெரியவில்லை. ஆனால் பத்மநாதன் ரமேஷ் விடுதலையாகிவிட்டார்.

எனது மகன் தொடர்பு எதுவும் இல்லாது தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரை நீதி மன்றில் ஆஜர் செய்ய உத்தரவிடுங்கள் என்று மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

இம் மனுவில் கோண்டாவில் இராணுவ முகாம் கொமாண்டர், பலாலி இராணுவ முகாம் கொமாண்டர், இராணுவத் தளபதி, சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (இ-3)

## திடீர்...

(முதலாம் பக்கத் தொர்டர்)

17 மாவட்டங்களில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலை நாடாளுமன்ற தேர்தலாகக் கருதி ஆராய்ந்தால், பொ. ஐ. மு. 94 ஆசனங்களையும் ஐ. தே. க. 68 ஆசனங்களையும் பெறும்.

இதில் தேசிய பட்டியல் எம். பிக்கள் எண்ணிக்கை 29 சேர்க்கப்படவில்லை.

1994 ஆம் ஆண்டுத் தேர்தலில் 168 தொகுதிகளில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 81 ஆசனங்களையும், ஐ. தே. க. 76 ஆசனங்களையும் பெற்றிருந்தன.

ஐ. தே. கவின் 68 ஆசனங்களுடன் தேசிய பட்டியல் எண்ணிக்கையையும் சேர்த்தால் ஐ. தே. க. மூன்றில் ஒரு பங்கு இடத்தையே பெற முடியும். பொ. ஐ. முன்னணிக்கு கூடுதல் இடம் கிடைக்கும். சிறுபான்மையோரின் ஆதரவு இன்றி அரசாங்கம் ஆட்சி அமைக்க முடியும்.

இப்படி அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

## ஓவியர் மீது தாக்குதல்

கொழும்பு, மார்ச் 28

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் படத்தை வரைந்த கலைஞர் ஒருவர் இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

புனத்சிங்கள என்னும் இடத்தைச் சேர்ந்த ரி. ஏ. பண்டிதரத்தின என்ற கலைஞரே தாக்கப்பட்டவராவார்.

அவர் வரைந்த சந்திரிகாவின் படத்தையும் அந்தக் கோஷ்டியினர் கிழித்தெறிந்தனர்.

இது தொடர்பாக விசாரணை நடத்திய பொலீஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர். (இ-3-155)

## புலிகளின் கையில் ஹெலி இல்லை என்று தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

விமானப் படையின் தாக்குதல் ஹெலியான எம்.ஐ. - 24 விடுதலைப் புலிகளின் கைகளில் சிக்கியுள்ளதாக வெளிவந்த செய்திகளை விமானப் படை நிராகரித்துள்ளது.

இந்தக் ஹெலி கடத்தப்படவில்லை என்றும் —

இயந்திரக் கோளாறு காரணமாகக் கடலில் வீழ்ந்துள்ளது என்றும் விமானப்படை வட்டாரங்கள் கருதுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## மது விற்பனை ஆந்திராவில் அனுமதி

புதுடில்லி, மார்ச் 28

ஆந்திரா மாநிலத்தில் மாநில அரசு மீண்டும் மது விற்பனையை அனுமதிக்கும் சட்டம் ஒன்றை அனுமதித்துள்ளது.

மதுவிற்பனையை முற்றாகத் தடைசெய்யும்சட்டத்தை அங்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு அமுல் செய்து வந்தது. ஆனால் அது அரசின் வருமானத்தைப் பாதித்ததுடன் கள்ளச் சாராய விற்பனையை பெருக்கிவிட்டிருந்தது. (ஐ)

## இ. தொ. கா. மீண்டும்..

(முதலாம் பக்கத் தொடர்)

கத்தை ஆதரித்து வருகிறது. இ. தொ. காவின் தலைவர் தொண்டமான், அமைச்சர் பதவி பெற்று அரசாங்கத் தரப்பில் அமர்ந்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் இ.தொ.கா சில இடங்களில் தனது சேவல் சின்னத்திலும், பல இடங்களில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் சின்னத்திலும் வேட்பாளர்களை நிறுத்தியது.

ஆனால் மொத்தத்தில் பெரும் தோல்வி அடைந்தது.

இ. தொ. காவின் இந்தத் தோல்வியினால் அரசாங்கம் அதன் மீது நம்பிக்கை இழந்து விட்டதாக அரச வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

அதே வேளை, தோட்டத் தொழிலாளர் விடயத்தில் அரசாங்கம் பெரிதாக எதனையும் செய்யவில்லை என்று இ.தொ. கா. வட்டாரங்களில் அதிருப்தி நிலவுகிறது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு தோட்டத் தொழிலாளர்கள் நம்பிக்கை வைக்குமளவுக்குச் செயற்படவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெவிக்கின்றன.

நாம் மீண்டும் ஐ. தே. கட்சியில் சேர வேண்டிய நிலை உருவாகியுள்ளது தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பில் இருந்து இது தெளிவாகிறது — என்று அமைச்சர் தொண்டமானின் நெருங்கிய சகா ஒருவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இதே வேளை —

உள்ளூராட்சித் தேர்தலில் கிடைத்த தோல்வியை அடுத்து, அது குறித்து ஆராய்வதற்காக ஞாயிற்றுக்கிழமை இ.தொ. காவின் முக்கிய கூட்டம் ஒன்று நடைபெற உள்ளது. அப்போது தலைமைப் பதவிகளில் மாற்றங்கள் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறதென கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் தொண்டமான் மற்றும் அவரது பேரனும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் ஆகியோருக்கு எதிராக இக் கூட்டத்தில் கண்டனங்கள் எழுப்பப்படும் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

94 ஆம் ஆண்டுத் தேர்தலின் பின்னர் தொண்டமான் ஒருகாலை பொ. ஐ. முன்னணியிலும், மறுகாலை ஐ. தே. கவிலும் வைத்துள்ளார்.

தொண்டமான், — ஆறுமுகம் தலைமைத்துவம் இனியும் சரிவராது இ. தொ. காவுக்கு புதிய தலைமைத்துவம் வேண்டும் என்று கட்சியைச் சேர்ந்தவர்களில்பெரும் பகுதியினர் கோருகிறார்கள்— எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-3-150)

## தமிழ் டாக்டர்...

(முதலாம் பக்கத் தொடர்)

அமெரிக்கா சென்றார் என்பது குறித்து பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இம்மாத நடுப்பகுதியில் இந்தப் பெண் டாக்டர் மித்ரா ஆரியசிங்கவின் சீருடையை அமெரிக்காவுக்கு கடத்த முயன்ற சமயம் அவர் கட்டுநாயக்காவில் சுங்கப்பகுதியினரிடம் சிக்கியதும் —

பின்னர் அவரை அமெரிக்கா செல்ல அனுமதி மறுத்த பொலீஸார் அவரிடமும், மித்ரா ஆரியசிங்காவிடமும் அவரது மனைவியிடமும் வாக்குமூலங்களைப் பதிவு செய்ததும்— தெரிந்ததே.

அந்த தமிழ்ப் பெண் டாக்டர் தற்சமயம் அமெரிக்கா சென்றுவிட்டதாகக் கிடைத்த தகவலையடுத்து இவர் எவ்வாறு கட்டுநாயக்கா ஊடாக அமெரிக்கா சென்றார் என்பது தொடர்பாகவும்—

அவர் பயணம் செய்ய யார் உதவினார்கள் என்பது தொடர்பாகவும்— பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த பெண் டாக்டர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள பொலிஸ் கோஷ்டி ஒன்று அமெரிக்கா செல்லத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## மூன்று மாதங்களாக..

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த மாஹோ கப்பலில், கடந்த ஜனவரி மாதம் ஏற்றப்பட்ட வடபகுதிக்கான தபால் பொதிகளே இவைகள் ஆகும்,

ஜனவரி மாதம் தபால் பொதிகள் ஏற்றப்பட்டு மாஹோ கப்பல் புறப்பட ஆயத்தமான வேளை கப்பல் பழுதடைந்து திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

திருத்த வேலைகள் முடிவடைந்து நேற்று முன்தினமே கப்பல் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

சுமார் 128 தபால் பொதிகள் இக் கப்பலில் உள்ளன என தெரிவிக்கப்பட்டது. (இ-15)

மீண்டும் ஆரம்பம்

சுமங்கலி ஜுவலர்ஸ்

112 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இது வரை காலம் இயங்காமல் இருந்த எமது நகைமாடம் மீண்டும் அதே இடத்தில் புதுப்பொலிவுடன் இயங்க ஆரம்பித்துள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

அழகுக்கு அழகு செய்யும்

அசல் 22 கரட் தங்க நகைகளை

குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

சுமங்கலி ஜுவலர்ஸ்

★ எமக்கு வேறு கிளைகள் கிடையாது ★

(சி/384)

உடுவில் மகளிர் கல்லூரி

வெற்றி

பாடசாலைகளுக்கிடையிலான உடற் பயிற்சிப் போட்டிகளில் தொடர்ந்து வெற்றியை ஈட்டி, வலய இறுதிப் போட்டியிலும் முதலாம் இடத்தைத் தமதாக்கிக்கொண்ட இரு அணிகளையும் (17, 19 வயதுப் பிரிவுப் பெண்கள்) மனமாரப் பாராட்டுகின்றோம்.

பெற்றோர், பழைய மாணவர்கள்

(சி/387)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 361/2 இல் உள்ள அவர்களது பணிமனையில் 28 - 03 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org